# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**பொதுச் செயலாளர் பங்கேற்ற வேலை நிறுத்த விளக்கக்கூட்டம்**

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் சென்னை தொலைபேசி மாநில சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழ்வில் பங்கேற்க வந்ததை பயன்படுத்தி 10.07.2017 அன்று சென்னை CGM அலுவலக வளாகத்தில் வேல நிறுத்த விளக்க சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சுமார் 200 தோழர்கள் பங்கேற்ற அந்தக் கூட்டத்திற்கு CGM அலுவலக SNEA மாவட்ட செயலாளர் தோழர் G.வளனரசு தலைமை தாங்கினார். உணவு இடைவேளையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவரையும் BSNL ஊழியர் சங்கத்தின் CGM அலுவலக மாவட்ட உதவி செயலாளர் தோழர் D.ராமலிங்கம் வரவேற்றார். BSNL ஊழியர் சங்கத்தின் மாநில சங்க நிர்வாகிகள் தோழர் K.சீனிவாசன், தோழர் M.முருகையா, தோழர் K.V.சிவகுமரன், தோழர் T.பிரேமா மற்றும் AIBDPA மாநில செயலாளர் தோழர் C.K. நரசிம்மன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்ற அந்தக் கூட்டத்தை BSNL ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு சிறப்புரையாற்றினார்.

அவர் தனது சிறப்புரையில், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுப்பதற்கு முன் அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்தும் வகையில் நடைபெற உள்ள 27.07.2017 வேலை நிறுத்தம் மிக வெற்றிகரமாக்க வேண்டியதின் அவசியம் குறித்தும், அந்த வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்தார். அவரது உரை, பங்கேற்ற அனைத்து தோழர்களின் சந்தேகங்களையும் விளக்கும் வண்ணம் தெளிவாக இருந்ததை, பங்கேற்ற அனைத்து தோழர்களும் பாராட்டினர். இந்த சிறப்புக் கூட்டத்தை TSOA சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் T.செந்தில்குமார் நன்றி கூறி முடித்து வைத்தார். இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட்ட BSNLEU மற்றும் SNEA தலைமை பொது மேலாளர் அலுவலக மாவட்ட சங்கங்களை தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்**











